**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S. No.130 of 2018

Deposition of   P.W.1

Name of the Witness:  திருமதி.சுமதி

Date : 20.02.2025

***1, 4 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

9) வா.சா.ஆ.13ல் சற்குணம் என்பவர் சொத்தை வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு போட்ட பிறகு தான் வாங்கியிருக்கிறார். அவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சற்குணம் இறந்து விட்டார். அவரது வாரிசுகளை சேர்த்திருக்கிறேன். வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரம் 4ம் பிரதிவாதி பேரில் 22.10.2012 அன்று வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அதில் கையெழுத்து போட்டுள்ள சந்திரா (2ம் பிரதிவாதி) என்னுடைய அம்மா. அடுத்தது நான், அதற்கு அடுத்து 3ம் பிரதிவாதி செல்வி (எ) ஜோதிலட்சுமி, 4வதாக 1ம் பிரதிவாதி சக்தி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான்.

10) பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த பின்பு 4ம் பிரதிவாதியை எப்போது கேட்டேன் என்றால் அவரிடம் சென்று விசாரித்தேன். தேதி நியாபகம் இல்லை. பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த பிறகு 4ம் பிரதிவாதி பிளாட் போட்டு விற்று கொண்டிருந்தார். நான் எப்போது சென்று கேட்டேன் என்று நியாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 4.6.2012 விடுதலை பத்திரத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை. அதுபோல் ஆவணம் நான் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. அந்த விடுதலை பத்திரத்தை நான், எனது அம்மா, 2, 3 பிரதிவாதிகள் 1, 4 பிரதிவாதிகளுக்கு எழுதி

கொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த விடுதலை பத்திரம் எழுதி கொடுத்து பணத்தை பெற்று கொண்டு ஓ.எஸ்.198/2012 வழக்கை 21.6.2012 வாபஸ் பெற்றோம் என்றால் சரியல்ல. தொகையை பெற்று கொண்டதால் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கை என்னுடன் சேர்ந்து முன்வரவில்லை என்றால் சரியல்ல.

11) நான் பணத்தை பெற்று கொண்டு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்து அந்த தொகையை வைத்து எனது மகள்களுக்கு திருமணமும், வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. தற்போது சொத்துக்களின் விலை அதிகமாகி விட்டதால் நான் அதிகமாக பணம் இன்னும் கேட்டேன் என்றாலும், பணம் கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பணத்தை பெற்று கொண்டதால் தானும் மேற்கொண்டு பணத்தை கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் 2015 - 2016ல் நடவடிக்கை எடுக்காமல் தற்போது கால தாமதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) என் மகளுக்கு திருமணம் செய்யும் போது என் கணவருக்கு மாதம் ரூ.5000தான் சம்பளம் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என் கணவர் சம்பளத்தை தவிர எனக்கு வேறு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு அரைநாள் தான் வேலை. மீதி நேரத்தில் ரியல் எஸ்டேட் தொழில் செய்வார். அரசுபணியில் இருப்பவர்கள் தனியாக வேறு வேலையோ, தொழிலிலோ செய்ய முடியாது என்றும் நான் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு ரியல் எஸ்டேட் தொழில் மூலமாக வந்த வருமானத்திற்குஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வருமான வரி கணக்கும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.